இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை

**EPD4535/ESD2235 – ஆளுமை உளவியல்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 15.07.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

- பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. "ஆளுமை" எனும் பதத்தால் நீர் கருதுவது யாது?
2. "ஆளுமைப்பண்புகள்" பத்தினை (10) எழுதுக.
3. சிக்மன் பிராய்ட் பரிந்துரை செய்த ஆளுமையின் கூறுகளைச் சுருக்கமாக விளக்குக.
4. ஆல்போர்ட் (1996) பரிந்துரை செய்த ஆளுமைப் பண்புகளின் வகைகளைச் (Categories of Traits) சுருக்கமாக விபரிக்குக.
5. பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் தாக்கம் செலுத்தும் இரண்டு (02) முக்கிய காரணிகளை விளக்குக.
6. தனியாள் வேறுபாட்டை உதாரணங்கள் மூலம் விளக்குக.
7. எதிர்ப்பு குறைபாடு (Oppositional Defiant disorder) உள்ள குழந்தைகளின் ஐந்து (05) பண்புகளை எழுதுங்கள்.
8. பிள்ளைகளில் சமநிலையான ஆளுமையை விருத்தி செய்வதற்கு பெற்றோர்கள் பயன்படுத்தக்கூடிய ஐந்து (05) செயற்பாடுகளை எழுதுக.

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

i. அகமுகி (Introverted) மற்றும் புறமுகி (Extroverted) ஆளுமைப் பண்புகளை விபரிக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. பிள்ளைகளில் புறமுகி (Extroverted) ஆளுமைப் பண்புகளை வளர்ப்பதற்கு முன்பள்ளி ஆசிரியர் எவ்வாறு பங்களிப்பு செய்யமுடியும் என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

10.

i. மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியை விருத்தி செய்வதற்கு முன்பள்ளி ஆசிரியராக ஏற்பாடு செய்யக்கூடிய **மூன்று** (03) திட்டங்களை விளக்குக.

**(12 புள்ளிகள்)**

ii. பிள்ளைகளுக்கான இத்தகைய நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதில் முன்பள்ளி ஆசிரியர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

11.

i. ஆளுமை பற்றிய சமூகக் கற்றல் கோட்பாட்டாளர்கள் மற்றும் நடத்தைவாதிகளின் நோக்கினை ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

ii. சமூகக் கற்றல் கோட்பாட்டில் பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் முன்பள்ளி ஆசிரியர் எவ்வாறான உத்திகளை பயன்படுத்துவார் என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12.

i. பதகளிப்பு கோளாறினை விளக்குக.

**(03 புள்ளிகள்)**

ii. பதகளிப்பு கோளாறுகளிற்கான காரணங்களை விபரிக்குக.

**(07 புள்ளிகள்)**

iii. ஆசிரியரென்ற வகையில் பதகளிப்பு கோளாறுடைய பிள்ளைக்கு எவ்வாறான ஆதரவினை வழங்கமுடியும் என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13.

i. நடத்தைப் பிரச்சினையுடைய பிள்ளையைப் பற்றி கற்பதற்குரிய அவதானிப்பு படிவமொன்றை உருவாக்குக.

**(08 புள்ளிகள்)**

ii. நீங்கள் உருவாக்கிய அவதானிப்பு படிவமொன்றைப் பயன்படுத்தி பிள்ளையை எவ்வாறு கற்க முடியும் என்பதை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. நடத்தைப் பிரச்சினையுடைய பிள்ளைக்கு சார்பாக ஆசிரியர் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

**(06 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -